விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
**Valampurii**



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 151 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 05 வியாழக்கிழமை (19.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


யுத்தத்தில் கையை இழந்தவர் ஈகச் சுடரேற்றியபோது...

தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி

# கண்ணீரில் நனைந்தது முள்ளிவாய்க்கால் முற்றம்


உறவுகளை இழந்த தாயொருவர்...

(முல்லைத்தீவு)

தமிழினப் படுகொலையின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

இராணுவம், பாதுகாப்புத் தரப்பின் கெடுபிடிகளுக்கு மத்தியில் முள்ளிவாய்க்காலில் 2009ஆம் ஆண்டு யுத்தத்தில் உயிர்நீத்த உறவுகளுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

(15ஆம் பக்கம் பார்க்க)


உறவுகளை நினைவேந்தும் சிறுமி

மூவின மக்களும் ஒன்றிணைந்து

## கொழும்பு காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்


05ஆம் பக்கம் பார்க்க

ஒற்றையாட்சியை நீக்கி

## தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரியுங்கள்

முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் வலியுறுத்து


06ஆம் பக்கம் பார்க்க

## பேரறிவாளன் விடுதலை


09ஆம் பக்கம் பார்க்க

## கோ.சி.வேலாயுதம் காலமானார்


15ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றத்திலும் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி

(கொழும்பு)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று சபையில் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் உரையாற்றிய சந்தர்ப்பத்தில், அவரது கோரிக்கைக்கு அமைவாக ஒரு நிமி 15

## திருநெல்வேலியில் கோர விபத்து; மூன்று இளைஞர்கள் உயிரிழப்பு





(யாழ்ப்பாணம்)

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று இளைஞர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

திருநெல்வேலி கிழக்கு முடமாவடிச் 15

போரில் உயிர் நீத்தவர்களுக்கு

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வீட்டில் விளக்கேற்றி அஞ்சலி



(கொழும்பு)

முப்பது வருட இனப் படுகொலைப் போரில் நாம் இழந்தவை ஏராளம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தனது முகநூல் தளத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற கொடூர யுத்தம் மௌனிக்கப்பட்டு இன்றுடன் 13 வருடங்கள் ஆகின் 15

## உரும்பிராயில் விபத்து; இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் இடம்பெற்ற மேட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த 15

## கொழும்பில் நினைவேந்தல் ஊர்வலம்

ஜனாதிபதி செயலகம் முன் அஞ்சலி உரைகள்

(கொழும்பு)

2009ஆம் ஆண்டு இறுதியுத்தத்தின்போது உயிர் நீத்த உறவுகளை நினைவு [illegible] காலிமுகத்திடலில் 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 04.04.2022 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது செல்வப் புதல்வி

அமரர்
## செல்வி குணரத்தினம் மதுரா



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (18.05.2022) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (20.05.2022) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(11350)

அச்செழு மேற்கு, நீர்வேலி. 076 832 8274 குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் அங்கத்தவரும் யாழ். (குட்டாதெருச் சந்தி) ஐங்கரன் பேக்கரி உரிமையாளருமாகிய

அமரர்
## இராசு பொன்குமார்



அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தோற்றம் 30.05.1956 மறைவு 17.05.2022

நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்
யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

(C-4338)

## விற்பனைக்கு



விளக்குமாறு, துருவுபலகை, சிரட்டை அகப்பை, இருபலகை என்பவற்றை மொத்த வியாபாரிகள் பெற்றுக் கொள்ளலாம். சிரட்டை, ஈர்க்கு, பேணி கொள்வனவும் செய்யப்படும்.

077 210 5286
077 559 1778

(11413)

## பார்சல் பேப்பர் விற்பனைக்குண்டு

உணவுப் பார்சலுக்கு உகந்த தரமான வெள்ளைத்தாள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு 076 097 3121

# 29 ஆம் ஆண்டு நினைவலைகளுடன்



மலர்வு 01.01.1954

உதிர்வு 07.06.1993

அமரர்
## திருமதி நகுலேஸ்வரி நகுலராசா

திதி : சதுர்த்தி (19.05.2022)

அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்து
எம் குடும்பத்தின் அன்பு ஒளியாக
எம்முடன் இருந்த எம் குலவிளக்கே
இருபத்தொன்பது ஆண்டுகள் சென்றாலும்
இதயம் கனக்கிறது உம் நினைவுகளால்
கல்மனம் படைத்த காலனவன்
கவர்ந்தானோ உம் உயிரை
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

ராஜன் காட்வெயார், பருத்தித்துறை.

கணவன் மு. நகுலராசா
மற்றும் குடும்பத்தினர்
அம்பன், குடத்தனை.

(C-4340)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி விஜயகௌரி கமலதீபன் அவர்களின் பாசமிகு தந்தை

அமரர்
## சின்னத்தம்பி சரவணை



அவர்கள் 16.05.2022 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறப்பு : 01.07.1940
இறப்பு : 16.05.2022

(11434)

ஆசிரியர் நலனுரவுக் கழகம்
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, கந்தரோடை.

யாழ். வண்ணார்பண்ணையில்
# பட்ட தென்னை முறிந்து விழுந்ததில் முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீசும் கடும் காற்றினால் வீட்டின் முன் நின்ற பட்ட தென்னைமரம் முறிந்து வீழ்ந்ததில் அதில் அகப்பட்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன் (வயது-80) என்ற 2 பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

அவர் தனது வீட்டில் மதியம் சாப்பிட்டுவிட்டு அலைபேசி கதைத்துகொண்டு வீட்டு முற்றத்தில் கதிரையில் இருந்தபோது பட்ட தென்னை மரம் காற்றுக்கு பிரண்டு வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.


யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார், இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,33)




புலம்பெயர் தேசத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் நனைந்தது முள்ளிவாய்க்கால் முற்றம்









நந்திக் கடலில் மலர் தூவி அஞ்சலி





காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்




மன்னாரில்



வலி.கிழக்கு பிரதேச சபையில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(படங்கள் : தவசீலன், தேவானந்தன், ரவிஷாந், சதீஷ், ஜோசப்நயன்)

# மும்பை இன்டியன்ஸை வீழ்த்தியது
# சன்ரைசர்ஸ் ஐதராபாத்

சன்ரைசர்ஸ் ஐதராபாத்துக்கும் மும்பை இன்டியன்ஸ்க்கும் இடையில் மும்பை வான்கடே விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற மிகவும் பரபரப்பான ஐ.பி.எல் இருபது- 20 கிரிக்கெட் போட்டியில் 3 ஓட்டங்களால் சன்ரைசர்ஸ் ஐதராபாத் வெற்றிபெற்றது.

ராகுல் த்ரிபாதி குவித்த அதிரடி அரைச் சதம், உம்ரன் மாலிக்கின் துல்லியமான பந்துவீச்சு, புவ்னேஷ்வரின் ஒரு விக்கெட்டுடனான ஓட்டமற்ற 19ஆவது ஓவர் ஆகியன சன்ரைசர்ஸ் ஐதராபத்தை வெற்றி அடையச் செய்தன.

சன்ரைசர்ஸ் ஐதராபாத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 194 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடி மும்பை இன்டியன்ஸ் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

அணித் தலைவர் ரோஹித் ஷர்மாவும் இஷான் கிஷானும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடியதன் பலனாக மும்பை இண்டியன்ஸ் 10 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 89 ஓட்டங்களைக் குவித்து பலமான நிலையில் இருந்தது.

அவர்கள் இருவரும் 95 ஓட்டங்களை ஆரம்ப விக்கெட்டில் பகிர்ந்திருந்தபோது 11ஆவது ஓவரில் வோஷிங்டன் சுந்தரின் பந்துவீச்சில் ரோஹித் ஷர்மா (48) ஆட்டமிழந்தார்.

6 ஓட்டங்கள் கழித்து உம்ரன் மாலிக்கின் பந்து வீச்சில் இஷான் கிஷான் (43) நடையைக் கட்டினார்.

முன்னதாக அப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட சன்ரைசர்ஸ் ஐதராபாத் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைக் குவித்தது.

மொத்த எண்ணிக்கை 18 ஓட்டங்களாக இருந்தபோது அபிஷேக் ஷர்மா (9) ஆட்டமிழந்தார்.

ஆனால், ப்ரியம் கார்க், ராகுல் த்ரிபாதி ஆகிய இருவரும் 2 ஆவ்து விக்கெட்டில் 43 பந்துகளில் 78 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு உற்சாகம் ஊட்டினர்.

ப்ரியம் கார்க் 26 பந்துகளில் 46 ஓட்டங்களைக் குவித்தார்.

அதன் பின்னர் த்ரிபாதி, நிக்கலஸ் பூரன் ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 42 பந்துகளில் 76 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர்.

பந்துவீச்சில் ராமன்தீப் சிங் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். (4-6)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2618

### பிரியா


தன் மகள் கேட்ட பொம்மையை வாங்கிய திருப்தியில்...



ஏழை தகப்பனின் முகத்தில் ஓர் மந்திர புன்னகை

### வசந்தன்

குழந்தைகளோட நட்பை தொடர ஒரே வழி... எவ்வளவு அடிவாங்கினாலும் அழாம சிரிக்கனும்



### அஜன்


கோவத்துலயும் நிதானமாக செயற்படுவது எப்படீன்னு யாருக்கிட்ட கத்துக்கனும் தெரியுமா...!



கோவத்துல மொபைல தூக்கி வீசும்போது கூட கரெக்டா பஞ்சு மெத்தைல விழுற மாதிரி வீசுறான் பாருங்க அவன்கிட்ட தான்...


### தனிஷன்

ஐயோ என்னய அடிக்காத... அதுல ஒன்னு உன் னோட ஜியோ நம்பரு.. இன்னொன்னு ஏர்டெல் நம்பரு..!




### திவியா

ஜோதிடர் - உங்கள் வலது கையில் உள்ள இந்த மச்சத்தால் ஒரு நல்ல மனைவி அமைவாள்..



இவர் - அது மச்சம் இல்ல சூடுய்யா - அதை வச்சதே என் மனைவிதான்

### சதுர்வியா

இந்த விளையாட்டுல கண்டிப்பாக அப்பா தோற்று விடுவார்...



ஆனால் அவர் பாசம் தோற்காது...!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் முதல் முறையாக

# கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவுச் சுடர்

## தமிழர்களுடன் இணைந்த சிங்கள மக்கள்

(கொழும்பு)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று கொழும்பு காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் இடம் பெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தமிழர்களுடன் சிங்கள மக்களும் பங்கேற்றனர்.

அந்த வகையில், இலங்கை வரலாற்றில் முதல் முறையாக தென்னிலங்கையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றமை - குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மழையுடனான காலநிலை காரணமாக மின்தடை நேரம் குறையலாம்

(கொழும்பு)

மழையுடனான காலநிலை காரணமாக, தற்போது அமுலாக்கப்படும் மின் தடை நேரத்தை எதிர்காலத்தில் குறைக்க முடியும் என மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மழையுடனான காலநிலையால், நீர் மின் உற்பத்தி நிலையங்களை அண்டியுள்ள நீர்த்தேக்கங்களில், நீர்மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்வடைந்துள்ளமையே இதற்குக் காரணமாகும் என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நீர் மின் உற்பத்தி நிலையங்களை அண்டிய பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம், தற்போது 50 சதவீதமளவில் உயர்வடைந்துள்ளதாக மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நந்திக பத்திரண தெரிவித்துள்ளார். நீர் மின் உற்பத்தி மூலம் கடந்த வாரம் 210 ஜிகாவொட் மின்சாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மேலும் அதிகரித்தால், மின்னுற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

19.05.2022
வைகாசி 05, வியாழக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 1.02 மணிவரை

மூலம் முற்பகல் 9.28 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம் - கார்த்திகை, ரோகிணி,மிருகசீரிடம்

**வளவன்**

**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் கனிசமான ஆதாயம் கிடைக்கும், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** எதிர்ப்புகள் அகலும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், போசன நன்மையுண்டு.

**துலாம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**மகரம்** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், ஊர் மாற்றம் இடமாற்றம் என்பன இடம்பெறலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**ரிஷபம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கேட்ட இடத்தில் உதவி கிடைப்பது அரிது.

**சிம்மம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** உறவினர் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,வாய்ப்புக்கள் தேடி வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் நல்ன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்களின் சந்திப்பால் நன்மைகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.

**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும் தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள், ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும் வீட்டை சிரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுக முண்டு.

விசுவாசமே பணத்தினும் மதிப்பு வாய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சியை நீக்கி தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரியுங்கள்

## முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் வலியுறுத்து



(பனிக்கன்குளம்)

**ஈழத்தமிழர்களின் பூர்வீக தாயகமாக வடக்கு-கிழக்கை அங்கீகரித்து பேரினவாதத்தின் அடக்குமுறைக்கான ஒரு பொறிமுறையான ஒற்றையாட்சி முறையை நீக்கி தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

தமிழின படுகொலையின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது .

இந்நிகழ்வில் வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினால் வெளியிடப்பட்ட முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முள்ளிவாய்க்காலில் அரங்கேறிய இனப்படுகொலையின் நினைவு நாளான இந்நாளில் எங்களின் ஆத்மார்த்த கோரிக்கைகளை மீண்டும் ஒரு தடவை வலியுறுத்த விரும்புகின்றோம்.

நினைவுகூருதலுக்கான உரிமையும் ஓர் அடிப்படை உரிமை. அது ஈழத்தமிழர்களின் பண்பாட்டு உரிமையும் கூட. ஈழத்தமிழர்களின் அந்த உரிமையை இலங்கை அரசு ஒரு போதும் தடுக்க முடியாது.

தமிழினப் படுகொலைக்கு சர்வதேச விசாரணையை மீள வலியுறுத்துகின்ற அதேநேரத்தில் வடக்கு-கிழக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சிங்கள-பௌத்த மயமாக்கப்படும் தமிழர் தாயகம் உட்பட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு செயற்பாடுகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

ஈழத்தமிழர்களின் பூர்வீக தாயகமாக வடக்கு - கிழக்கை அங்கீகரித்தல் வேண்டும்.

பௌத்த-சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைக்கான ஒரு பொறிமுறையே ஒற்றையாட்சி முறைமை என்பதை ஏற்றுக் கொண்டு இலங்கையின் ஒற்றையாட்சியை அகற்றித் தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் வேண்டும்.

தமிழர்கள் ஒரு தேசமாக தங்களை அடையாளப்படுத்தத் தேவையான அனைத்து இயல்புகளையும் பண்புகளையும் கொண்டவர்கள் என்பதையும் அதன்வழி அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையும் ஒரு போதும் பராதீனப்படுத்தவியலாத இறைமையும் உள்ளது என்பதும் ஏற்கப்பட வேண்டும்.

மே 18 தனியே எமக்கான துயரத்தின் நினைவுகூரல் நாள் மட்டுமல்ல இந்தத் தீவின் அரசால் மக்கள் ஆதரவுடன் ஒரு இனம் இனப்படுகொலை செய்யப்பட்டது. இன்றுவரை இனவழிப்புக்கு உள்ளாகின்றது என்பதை உலகுக்கும் குறிப்பாக இத்தீவின் சக தேசமான சிங்கள மக்களுக்கும் சொல்வதற்கான ஒரு நாளுமாகும். இந்த நாள் "தமிழர்கள் நாம் வீழ்ந்துவிடவில்லை வீழ்ந்தாலும் மறுபடியும் எழுவோம்" என்று வீழ்ந்துபட்ட எம் உறவுகளுக்கு வாக்குறுதி அளிக்கும் ஒரு நாளுமாகும்.

இந்த உலகில் யார் பாராதிருந்தாலும் யார் எதிர்த்தாலும் நாங்கள் நிமிர்ந்தெழுவோம் போராடுவோம் விழுதெறிவோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-281)

# பொறுப்புக்கூறல் விடயத்தை நிபந்தனையாக்குங்கள்-நிரோஷ்



(யாழ்ப்பாணம்)

இறுதிப்போர் பொறுப்புக்கூறலை இலங்கைக்கு நெருக்கடி நிலை உதவி வழங்குவதற்குரிய நிபந்தனையாக சர்வதேசம் பிரயோகிக்க வேண்டும் என வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார். வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் நேற்று புதன் கிழமை முள்ளிவாய்க்கால் நினைவுச் சுடரினை ஏற்றி வைத்து உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், எமது மக்கள் மீது தொடர்ச்சியாக அரச பயங்கரவாதம் பிரயோகிக்கப்பட்டே வந்துள்ளது. சிங்கள மக்கள் போன்று நாட்டில் உரிமைகளுடன் நாமும் ஓர் தேசிய இனம் என்ற வகையில் வாழ வேண்டும் என்றே எமது இனம் அபிலாசை கொண்டுள்ளது. அரசியல் உரிமைகளை கேட்டு அகிம்சை வழியில் போராடிய போது எமக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்ட அரச பயங்கரவாதமே ஆயுதப் போருக்கு வழிவகுத்தது. அரச படைகள் ஊடாக எமது சிறுவர்கள், வயோதிபர்கள், பெண்கள் என்ற பாகுபாடின்றி மிலேச்சத்தனமாக படுகொலை செய்யப்பட்டுள்ளோம். போரில் குழந்தைகளைக் கூட கொன்று குவித்த அரசிற்கு எதிராக போதுமான மனித உரிமை ரீதியிலான ஒழுங்குகள் பிரயோகிக்கப்படவில்லை என்பதை ஓர் இனமாக நாம் வெளிப்படுத்துகின்றோம்.

இந்நிலையில் இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இலங்கைக்கு வழங்க இணக்கம் காணப்படுகின்ற உதவிகள் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்கள் பற்றிய பொறுப்புச் சொல்வதை உறுதிப்படுத்துவதுடன் தமிழ் மக்கள் மீது மீளவும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் உறுதிப்படுத்துவதாகவும் எமக்கான தீர்வை முன்வைப்பதாகவும் அமைய வேண்டும் எனத் தெரிவித்தார். (4-6)

# மோட்டார் சைக்கிள் திருட்டு

(கரணவாய்)

வல்வை முனியப்பர் கோவிலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் கடந்த 15 ஆம் திகதி திருடப்பட்டுள்ளது. வல்வை முனியப்பர் கோவிலை தரிசிப்பதற்காக ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை வீதியில் நிறுத்திவிட்டு கோயிலுக்குச் சென்றுள்ளார். இதன்போதே குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-60)



கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் Centre for Children's Happiness (CCH) நிறுவனத்தின் அனுசரணையுடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான போதைப்பொருள் தடுப்புத் தொடர்பான விழிப்புணர்வும் சிறார்களின் ஆளுமை விருத்தியும் மற்றும் புத்தாக்கமும் எனும் கருப்பொருளிலான செயலமர்வும் அண்மையில் கோப்பாய் பிரதேச செயலகப் புதிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்- ரவிசாந், கஜிந்தன்)

# இரத்ததான முகாம்

(சாவகச்சேரி)



சாவகச்சேரி டச் வீதி தென்னகத்தாரகை விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நாளை மறுதினம் சனிக்கிழமை கழகத் தலைவர் மு.கோகுல்ராஜ் தலைமையில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது. "உதிரம் கொடுத்து உயிர் காப்போம்" எனும் தொனிப் பொருளில் இடம்பெறவுள்ள இரத்ததான முகாம் காலை 9 மணி தொடக்கம் ஒரு மணி வரை டச் வீதியில் உள்ள ஸ்ரீபழநி அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (4-6-30)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச கலாசாரப்பேரவை பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பேரவை அங்கத்தவர்கள் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் மூடப்படவுள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுகள்

## சுகாதார அதிகாரிகள் அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

**அரச மருத்துவமனைகளில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகள் (ICU) மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (HDUs) விரைவில் மூடப்படும் என்று சுகாதார அதிகாரிகள் அபாய எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.**

நோயாளிகளின் அதிதீவிர சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளை பராமரிக்க இன்றியமையாத இரத்த வாயு பகுப்பாய்வுகளுக்கு தேவையான மருந்துகள் பற்றாக்குறை எதிர்காலத்தில் கடுமையான நெருக்கடியை ஏற்படுத்தும் என்று மருத்துவ ஆய்வக வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

இதன் விளைவாக, அதிதீவிர சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் குளிரூட்டும் இயந்திரங்களில் சிகிச்சை பெறும் நோயாளிகள் அதிக ஆபத்தில் உள்ளனர். இரத்த வாயு பகுப்பாய்வுகள் இல்லாமல் தீவிர சிகிச்சைப் பிரிவுகளை பராமரிப்பது கூட பயனற்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-6)

# கோதுமை மாவின் விலையை 35 ரூபாவால் அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 35 ரூபாவினால் அதிகரிக்க நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கோதுமை மா ஏற்றுமதியை நிறுத்த இந்தியா தீர்மானித்துள்ளது. இதன்காரணமாக உலக சந்தையில் கோதுமை மாவின் விலை தற்போது கடுமையாக உயர்ந்து வருகிறது.

இந்த நிலையிலேயே இலங்கையில் கோதுமை மாவின் விலையை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-6)

# இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுங்கள்

## புலம்பெயர் இலங்கை மக்களுக்கு சஜித் அழைப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் அனைவரும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் அனைவரும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அத்துடன் வெளிநாட்டவர்கள், இலங்கைக்கு சுற்றுலாவை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் சர்வதேச சமூகத்துக்கு வேண்டுகோள் விடுத்தார். (நி-6)

# 160 மில்லியன் டொலர் உலக வங்கி நிதியுதவி

## பெற்றோல் கொள்வனவு குறித்து அவதானம்

(கொழும்பு)

உலக வங்கியிடமிருந்து 160 மில்லியன் அமெரிக்க டொலர் நேற்று முன்தினம் கிடைத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் பெற்றோலினை கொள்வனவு செய்வது குறித்து ஆலோசிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# பாராளுமன்றம் வந்தார் மகிந்த

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கடந்த 9 ஆம் திகதி தாக்குதல்களுக்குப் பின்னர் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று பாராளுமன்றத்துக்கு வந்து அமர்வுகளில் பங்கேற்றார்.

கொழும்பு - காலிமுகத்திடலில் அமைதியாகப் போராடியோர் மீது மகிந்த ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, அலரி மாளிகை போரோட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டது.

இதனையடுத்து அங்கிருந்து தப்பியோடிய மகிந்த, திருகோணமலை கடற்படைத் தளத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டார்.

இவ்வாறான நிலையிலேயே ஒரு வாரத்துக்கும் மேல் தலைமறைவாக இருந்த முன்னாள் பிரதமர் மகிந்த நேற்று பாராளுமன்றத்துக்கு வந்து அமர்வில் பங்கேற்றார். (நி-6)

# கோட்டாவுக்கு எதிராகவே வாக்களிப்பேன்

## பிரதமர் ரணில் டுவிட்

(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்டுள்ள அதிருப்திப் பிரேரணை விவாதத்துக்கு வரும்போது அதற்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிரான அதிருப்திப் பிரேரணையை விவாதத்துக்கு எடுப்பது என்பதை முடிவு செய்வதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தோற்கடிக்கப்பட்டமையை அடுத்து பிரதமர் இவ்வாறு தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

"இது ஜனாதிபதிக்கு எதிரான அதிருப்திப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு அல்ல. இது அனைத்து பாராளுமன்ற நடவடிக்கைகளையும் இடைநிறுத்துவதற்கும், அதிருப்திப் பிரேரணையை உடனடியாக விவாதிப்பதா? என்பதை முடிவு செய்வதற்குமான வாக்கெடுப்பாகும்.

தமது வீடுகள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் விவாதம் நடத்த விரும்பும் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்திப் பிரேரணையை உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள்.

எனவே, இது தோல்வியடையும் என நான் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு அறிவுரை கூறியிருந்தேன்.

ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் மீதான தாக்குதல்கள் தொடர்பான விவாதத்தை நேற்று நடத்துவதற்கு அனுமதித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என ரணில் பதிவிட்டுள்ளார். (நி-6)

# சொகுசு வாகனங்களை கைவிட்ட எம்.பிக்கள்

(கொழும்பு)

பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிய கார்கள் மற்றும் வான்களில் நேற்று முன்தினம் பாராளுமன்றம் வருகை தந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு காரணங்களுக்காக அவர்கள் அத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம் என்று பாராளுமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர். பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் மிகக் குறைவான சொகுசு வாகனங்களே காணப்பட்டன. எம்.பிக்களுடன் பாதுகாப்புப் படையினரும் வருகை தந்தனர். (நி-6)

# யுத்த வெற்றி தினத்தை முன்னிட்டு அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

யுத்த வெற்றி தினத்தை முன்னிட்டு அடுத்த நிலைக்கு தகுதியுடைய 396 அதிகாரிகள் மற்றும் 8,110 சிப்பாய்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன், பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (நி-6)

# ஒரு மில்லியன் டொலர் கூட மத்திய வங்கியிடம் இல்லை

## பாராளுமன்றில் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியிடம் ஒரு மில்லியன் டொலர்கள் கூட இல்லை. தற்போது நாங்கள் கடன்களை எவ்வாறு திருப்பிச் செலுத்தப்போகின்றோம் என்பது குறித்து எங்களிடம் திட்டம் எதுவுமில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டம் குறித்து ஹர்ஷ டி சில்வா எழுப்பிய கேள்விக்கு பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உண்மையை தெரிவிக்க வேண்டும், மத்திய வங்கியிடம் ஒரு மில்லியன் டொலர்கள் கூட இல்லை. எங்கிருந்து பணத்தை பெறுவது என்பது தெரியாத நிலையில் நாங்கள் உள்ளோம்.

நான் பொருளாதார மீட்புக் குழுவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளேன். உங்கள் ஆலோசனைகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-6)

# யானை மட்டுமே என்னிடம் எஞ்சியுள்ளது

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் கவலை வெளியீடு

(கொழும்பு)

தற்போது தன்னிடம் யானை மட்டுமே உள்ளது என்று நேற்று பாராளுமன்றில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா கவலை வெளியிட்டார்.

தனது சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் பாராளுமன்றத்தில் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அண்மைய வன்முறை முறைச் சம்பவங்களால் தான் பாதிக்கப்பட்டதாகவும், இந்த சம்பவத்திற்கு இழப்பீடு வழங்காமல் நியாயமான விசாரணையை கோருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தந்தை, தாத்தாவிடம் இருந்து பெற்றதையும், தான் சம்பாதித்ததையும் வன்முறைச் சம்பவங்களால் இழந்துவிட்டதாகவும், ஆனால் அதை உணர்ந்து கொண்டதாகவும், இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்தால் நாடு நாசமாகிவிடும் என்றும் அவர் கவலை வெளியிட்டார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம் 49

## அன்பிற்கு விலையில்லை...



பாடசாலையில் படித்துக் கொண்டே வீடு வீடாக பொருட்களை விநியோகிக்கும் ஒரு சிறுவனுக்கு களைப்பின் காரணமாக ரொம்ப பசித்தது. எதையாவது வாங்கி சாப்பிடலாம் என்றால் கையில் பணமே இல்லை. அருகில் இருந்த வீட்டில் ஏதாவது சாப்பிட கேட்கலாம் என்று நினைத்து.

அந்த வீட்டின் கதவைத் தட்டினான். ஒரு பெண் கதவைத் திறந்தாள். ஏதாவது கேட்கலாம் என்று நினைத்த வேளை கூச்சம் காரணமாக கேட்க மனம் வரவில்லை.

"கொ... கொஞ்சம் தண்ணி கிடைக்குமா குடிக்க?" தயக்கத்துடன் கேட்டான்.

அவள் சிறுவனின் கண்களில் இருந்த பசியை கவனித்தாள். உள்ளே சென்றவள். ஒரு கோப்பை பாலை கொண்டு வந்து கொடுத்தாள்.

பாலைக் குடித்து பசியாறிய சிறுவன் கேட்டான் "நான் எவ்வளவு கடன்பட்டிருக்கிறேன்?"

"கடனா. அப்படி ஒன்றும் இல்லை. அன்பான செயலுக்கு விலை எதுவும் இல்லை என்று என் அம்மா சொல்லியிருக்கிறார்." அவள் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

"ரொம்ப நன்றி" சிறுவன் புன்னகையுடன் கடந்து சென்றான்.

ஆண்டுகள் கழிந்தன. கஷ்டப்பட்டு முட்டி மோதி படிப்பை முடித்த அந்த சிறுவன் மருத்துவம் படித்து அந்த நகரிலேயே மிகப் பெரிய வைத்தியர் ஆனான். அந்த சமயத்தில் அந்த பெண்ணுக்கோ ஒரு கொடிய நோய் வந்தது.

அவர் பணியாற்றிய மருத்துவமனையிலேயே அவளும் அனுமதிக்கப்பட்டிருந்தாள். அந்த வைத்தியரிடமே அவளுடைய பரிசோதனை அறிக்கையும் வந்தது. மருத்துவ அறிக்கையில் அந்தப் பெண்ணின் ஊர் பெயரை பார்த்ததும் அந்தப் பெண்ணைக் குறித்து விசாரித்தார். விரைவாகப் போய் அந்தப் பெண்ணை பார்த்தார். அவர் தான். தனது சிறுபராயத்தில் பசியாற்றிய அந்த தாயுள்ளம் என்பதை கண்டறிந்தார். அந்த உண்மை தெரிந்த முதல் அன்று முதல் தனது முழுக்கவனத்தையும் செலுத்தி அந்தப் பெண்ணுக்கு சிகிச்சை அளித்தார். நீண்ட சிகிச்சைக்குப் பின்னர் அவள் குணமானாள். பல இலட்சங்கள் செலவானது. மருத்துவமனை அந்தப் பெண்ணுக்கு ஒரு நீண்ட கட்டண சீட்டை அனுப்பியது. இதை எப்படி கட்டப்போகிறோமோ என்று பதட்டத்துடன் அதை பிரித்தவள் திகைத்துப் போனாள். அந்தக் கட்டணச் சீட்டின் கடைசியில் கையால் எழுதப்பட்டிருந்தது.

"இந்தக் கட்டணத்தை நீங்கள் செலுத்தவேண்டியதில்லை. ஒரு கோப்பைப் பாலில் உங்கள் கடன் முழுதும் தீர்க்கப்பட்டுவிட்டது. இது நன்றி சொல்லும் நேரம்!" என்றிருந்தது...

அவளுக்கு கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வந்தது. அந்த சிறுவன் வேறு யாருமல்ல. அமெரிக்காவின் மிகப் பிரபல மருத்துவராக விளங்கிய DR. HOWARD KELLY தான். அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி. (குறள் 226)

பொருள் : வறியவர்களின் பசியைப் போக்குங்கள். அது தான். செல்வம் பெற்ற ஒருவன். அது பிற்காலத்துக்கு தனக்கு உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

**அன்பு வாசகர்களே!**

**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

## உடையில் 'Z' சின்னம்

### ஜிம்னாஸ்டிக் வீராங்கனைக்கு தடை

(மொஸ்கோ)

உக்ரைன் மீதான படையெடுப்பிற்கு ஆதரவான சின்னத்தை அணிந்ததற்காக ரஷ்ய ஜிம்னாஸ்டிக் வீரருக்கு ஓராண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் கட்டாரில் நடந்த போட்டியில், வெண்கலப் பதக்கத்தை பெற்றுக் கொள்ளும் போது ரஷ்ய வீரர் தனது உடையில் "Z" என்ற சின்னத்தை பொறித்திருந்தார். பதக்கம் பெறும் மேடையில் தங்கப் பதக்கம் வென்ற உக்ரேனிய வீரர் அவர் அருகில் நின்றிருந்தார்.

உக்ரைனில் உள்ள ரஷ்ய போர் வண்டிகள் மற்றும் வாகனங்களில் Z என வர்ணம் பூசப்பட்டு, போருக்கு ரஷ்யர்களால் அனுப்பப்படுகின்றது.

இந்நிலையில் ஜிம்னாஸ்டிக்ஸ் நெறிமுறைகளை 20 வயதான குறித்த வீரர் மீறியுள்ளதாக நிர்வாகக் குழு அறிவித்துள்ளது.

அத்தோடு அவர் பெற்றுக் கொண்ட பதக்கத்தையும் பரிசுத் தொகையையும் திருப்பித் தர வேண்டும் என்றும் முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## 30 ஆண்

# பேர

# உச்ச

(டில்லி)

ராஜீவ் காந்தி

நீதிமன்றம் தீர்ப்பு

பேரறிவாளன் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றத்தில் மத்திய, மாநில அரசுகள் எழுத்துபூர்வமான வாதங்களைத் தாக்கல் செய்திருந்தன. அவரை விடுவிக்கும் அதிகாரம் யாருக்கு என்பது தொடர்பாக மத்திய, மாநில அரசுகள்

சா
பெ
கட
ர
ப்
நீ
தத

## ரஷ்யாவை விட்டு வெளியேறு

# மெக்டோனல்ட்ஸ்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் உள்ள மெக்டோனல்ட்சின் 850 உணவகங்கள் உள்ளூர் நிறுவனத்திற்கு விற்கப்படுகிறது.

கம்யூனிச நாடுகளின் கூட்டமைப்பான சோவியத் ஒன்றியம் 1990-களில் பிரிந்த போது ரஷ்யாவிற்கு மெக்டோனல்ட்ஸ் உணவகம் வந்தது.

இது அமெரிக்க முதலாளித்துவத்தின் அடையாளம் என பேசப்பட்டது. 1990 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி மத்திய மொஸ்கோவில் புஷ்கின் சதுக்கத்தில் இந்த உணவகம் தொடங்கப்பட்டபோது. இதில் விற்கப்படும் பிக் மேக் என்ற பர்க்கரை வாங்குவதற்கு 30,000 பேர் கூடியிருந்தனர்.

30 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வந்த இந்த மெக்டோ ல்ட்ஸ் உணவகங்கள் தற்போது ர யாவை விட்டு வெளியேறுவத அறிவித்துள்ளது. உக்ரைனுக்கு ராக ரஷ்ய படையெடுப்புக்கு எதிர் தெரிவித்து மெக்டோனல்ட்ஸ் ர யாவை விட்டு வெளியேறுவத அறிவித்துள்ளது.

ரஷ்யாவில் உள்ள மெக்டோ ல்ட்சின் 850 உணவகங்கள் உ ளூர் நிறுவனத்திற்கு விற்கப்படுகிற மீதமுள்ள உணவகங்கள் என் ஆகும் என்று தெரியவில்லை.

இந்நிலையில் மூடப்படவு மெக்டோனல்ட்ஸ் உணவகத் விற்கப்படும் பிக் மேக் பர்க்கரை வா ஏராளமானோர் வரிசையில் கா ருந்தனர். (நி

## உக்ரைனுக்கான நிதி அ

## நட்பு நாடுகளிடம் அ

(பிரஸ்ஸல்ஸ்)

உக்ரைனின் நட்பு நாடுகள் அவர்களுக்கான நிதி உதவியை அதிகரிக்க வேண்டும் என அமெரிக்க கருவூல செயலாளர் ஜேனட் யெலன் தெரிவித்துள்ளார்.

பிரஸ்ஸல்ஸ் பொருளாதார


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ண்டு கால போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி

# றிவாளன் விடுதலை

# ச நீதிமன்றம் தீர்ப்பு

ி கொலை வழக்கில் பேரறிவாளனை விடுதலை செய்து உச்ச
ப்பு வழங்கியுள்ளது.



சார்பில் வாதங்களும் நடைபெற்றன.

முன்னதாக, இந்த வழக்கு கடந்த 11 ஆம் திகதி விசாரணைக்கு வந்தபோது, தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இந்நிலையில், இந்த வழக்கில் நீதிபதி எல்.நாகேஸ்வர ராவ் தலைமையில் நீதிபதிகள் பி.ஆர்.கவாய், ஏ.எஸ்.போபண்ணா அடங்கிய நேற்றைய அமர்வில் காலை 10.45 மணியளவில் தீர்ப்பை வாசித்தனர்.

161 ஆவது பிரிவில் முடிவெடுக்க ஆளுநர் தாமதப்படுத்தியதால், அரசியல் சாசன சட்டத்தின் 142 ஐ பயன்படுத்தி உச்ச நீதிமன்றமே பேரறிவாளனை விடுதலை செய்வதாக நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர். (நி-6)

---

## ...வும்
## ...ஸ்

...டோனா ...து ரஷ் ...வதாக ...க்கு எதி ...எதிர்ப்பு ...ஸ் ரஷ் ...வதாக

...டோன ...ர் உள் ...டுகிறது. ...என்ன

...வுள்ள ...கத்தில் ...வாங்க ...காத்தி (நி-6)

---

## காற்று மாசு காரணமாக

### ஆண்டுக்கு 90 லட்சம் மக்கள் உயிரிழப்பு

### ஆய்வு முடிவில் அதிர்ச்சித் தகவல்

(வோஷிங்டன்)

உலக அளவில் ஆண்டுக்கு 90 இலட்சம் மக்கள், மாசடைந்த காற்றை சுவாசிப்பதன் மூலம் உயிரிழப்பதாக ஆய்வில் தகவல்கள் வெளியாகின.

அமெரிக்காவை சேர்ந்த தி லான்செட் பிளானட்டரி ஹெல்த் இதழ் சார்பில் நடத்தப்பட்ட காற்று மாசு உயிரிழப்பு குறித்த புதிய ஆய்வில் பல்வேறு அதிர்ச்சித்தகவல்கள் வெளியாகி உள்ளன.

கார்கள், சரக்கு வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளி வரும் அசுத்தமான காற்று காரணமாக உயிரிழப்பு எண்ணிக்கை கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து 55 சதவீதம் உயர்ந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

வங்காளதேசம் மற்றும் எதியோப்பிய நாடுகளில் கடந்த 2019 ஆம் ஆண்டில் காற்று மாசுபாட்டின் காரணமாக 1,42,883 இறப்புகள் நிகழ்ந்துள்ளன.

காற்று மாசு உயிரிழப்பு நாடுகள் பட்டியலில் அமெரிக்காவும் இடம் பெற்றுள்ளது. உலகின் மிகப்பெரிய மக்கள் தொகையை கொண்டுள்ள இந்தியாவும், சீனாவும் காற்று மாசுபாடு உயிரிழப்பில் உலகில் முன்னணியில் உள்ளன.

அதேசமயம் புருனே, கட்டார் மற்றும் ஐஸ்லாந்து ஆகியவை குறைந்த காற்று மாசு இறப்பு விகிதங்களை கொண்டுள்ளன. காற்று மாசுடன் சிகரெட் புகைத்தல் மற்றும் பல்வேறு புகை ஆகியவையும் இணை வதன் மூலம் அதிக எண்ணிக்கையில் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. (நி-6)

---

## ரஷ்ய படையெடுப்பின் பின் மனைவியுடன் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட உக்ரைன் ஜனாதிபதி



(கீவ்)

உக்ரைன் மீது ரஷ்யா 3 மாதங்களுக்கு முன்னர் படையெடுப்பை மேற்கொண்டதற்குப் பின்னர் முதல் தடவையாக உக்ரைனிய ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலன்ஸ்கி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தனது மனைவி ஒலெனா சகிதம் பொது இடத்தில் தோன்றியுள்ளார்.

உக்ரைன் 1991 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்திலிருந்து பிளவடைந்ததையடுத்து அந்நாட்டை ஆட்சி செய்த முதலாவது ஜனாதிபதியான லியோனிட் கிராவ்சுக்கின் மரணச்சடங்கு கீவ் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அதில் இருவரும் கலந்து கொண்டனர். (நி-6)

---

## ...திகரிக்கப்பட வேண்டும்


## ...மெரிக்கா கோரிக்கை

மன்றத்தில் ஆற்றிய உரையின் போதே அமெரிக்க கருவூல செயலாளர் ஜேனட் யெலன் இந்த கோரிக்கையை விடுத்தார்.

அமெரிக்க செனட் சபை 40 பில்லியன் டொலர் இராணுவ மற்றும் மனிதாபிமான உதவியை வழங்க தீர்மானித்த திற்கு ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு ரஷ்யாவின் எரிசக்தி வருவாயைக் குறைக்க ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்ய எண்ணெய் மீதான இறக்குமதி வரிகளைக் கட்டம் கட்டமாக தடை செய்யலாம் எனவும் அவர் பரிந்துரைத்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று அதன் இறுதி நாளை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

(படங்கள் : சிவசாந்தன், கஜிந்தன்)

# வவுனியாவில் விபத்து ஒருவர் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியா ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா நகரில் இருந்து தாண்டிக்குளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் முன்னே சென்ற முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-299)

# வவுனியாவில் டீசல் பெற நீண்ட வரிசையில் மக்கள்



(நெளுக்குளம்)

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரண்டில் மாத்திரமே டீசல் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை காணப்படுவதனால் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை காணப்படுகின்றது.

நகர மத்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் வவுனியா மன்னார் சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலேயே டீசல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்று அதிகாலையில் இருந்து வாகனங்கள் வரிசையில் காத்திருந்து டீசலை பெற்று வரும் நிலையில் விவசாயத் தேவைகளுக்காக கொள்கலன்களிலும் டீசலை பெற பொதுமக்கள் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் இல்லா நிலையில் மோட்டார் சைக்கிள் பாவனையாளர்கள் மற்றும் முச்சக்கரவண்டி சாரதிகள் பெரும் துன்பத்திற்குள்ளாகியுள்ளனர். (4-6-299)

# வீதியை விட்டு விலகி

## பனை மரத்துடன் மோதிய பேருந்து


## இருவர் படுகாயம்



(நெளுக்குளம்)

யாழ்ப்பாணம் கண்டி பிரதான வீதியில் மதவாச்சி சியம்பலகஸ்வெவ பிரதேசத்திற்கு அருகில் நேற்று முன்தினம் மாலை பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி பனை மரத்தில் மோதியதில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வவுனியாவில் இருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த தனியார் பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த பேருந்து வீதிக்கு அருகில் இருந்த பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளான நிலையில் பனை மரம் முறிந்து வீழ்ந்துள்ளது. விபத்தில் பேருந்து சாரதி உட்பட மற்றுமொருவர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதிவேகமாக வாகனத்தை செலுத்தியமையினால் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூனாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-299)





63 ஆவது சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு இலங்கை சார்பாக வடமாகாணத்தில் தெரிவாகிய ஒரே ஒரு தமிழ் மாணவனான கிளி நொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் திருக்குமரன் சர்வ தேச போட்டிக்காக நோர்வே செல்லவுள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் நோர்வே யின் ஒஸ்லோ நகரத்தில் குறித்த போட்டி நடைபெற உள்ள நிலையில் இலங்கையிலிருந்து ஆறு மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். அவர்களில் ஐந்து சிங்கள மாணவர்கள் அடங்கும் நிலையில் இவர் ஒருவர் மாத்திரமே தமிழ் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

(படம் - சப்தசங்கரி, தேவானந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 150 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 280 |
| தக்காளி | 700 | 600 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 120 |
| கோவா | 230 | 250 | 240 |
| கரட் | 180 | 350 | 320 |
| பூசணி | 120 | 80 | 100 |
| புடோல் | 250 | 250 | 200 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 180 |
| பாகற்காய் | 450 | 650 | 500 |
| வெண்டக்காய் | 200 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 150 |
| பயற்றங்காய் | 350 | 600 | 400 |
| லீக்ஸ் | 200 | 200 | 240 |
| பீற்றூட் | 250 | 250 | 300 |
| கறிமிளகாய் | 300 | 300 | 240 |
| முருங்கைக்காய் | 1000 | 1200 | 1000 |
| போஞ்சி | 400 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 160 | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 70 |
| தேசிக்காய் | 800 | 500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 |
| இராசவள்ளி | 150 | 260 | 180 |
| வெங்காயப்பூ | 400 | — | — |
| முள்ளங்கி | 80 | 180 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2022-14.06.2022

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



மற்றவர்களை வழிநடத்திச் செல்வதில் வல்லவர்களான சிம்ம இராசி வாசகர்களே!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் 10 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால், தொழில் முன்னேற்றம் ஏற்படும். அஷ்டம குருவால், விரயங்கள் கூடும்.

**மீன - செவ்வாய் சஞ்சாரம்**

## எதிலும் யோசித்து செயற்படுவது நல்லது!

வைகாசி 3 ஆம் திகதி, மீன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அவர் உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்திற்குச் செல்வது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லையும், மனக் குழப்பமும் உண்டாகும். குருவோடு செவ்வாய் இணைந்து 'குருமங்கள யோகம்' ஏற்படுவதால், இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். பொருளாதார பற்றாக்குறை நிலவும். இடம், பூமியால் கிடைக்க வேண்டிய இலாபம் தாமதமாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது.

**சனி - செவ்வாய் பார்வைக் காலம்**

வைகாசி 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். எனவே உங்கள் இராசிப்படி அஷ்டம ஸ்தானம் வலுவடைகிறது. உறவுகள் பகையாகலாம். பிறருக்கு நன்மை செய்தாலும் அது தீமையாகத் தெரியும். உத்தியோகத்தில் பதவி உயர்வு தாமதப்படும். பண நெருக்கடி அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லை உண்டாகும்.

**புதன் வக்கிர நிவர்த்தியும் ரிஷப சஞ்சாரமும்**

வைகாசி 7 ஆம் திகதி, மேஷ இராசியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு தன-லாபாதிபதியான புதன் வக்கிர நிவர்த்தியாவதால், மிகுந்த யோகம் வந்து சேரும். தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். வைகாசி 23 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார்.

எனவே 'புத ஆதித்ய யோகம்' செயற்பட்டு, கல்விக்காக எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொதுவாழ்வில் புதிய திருப்பங்கள் ஏற்படும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர்.




**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**


இதுவரை மீனத்தில் உச்சம் பெற்றிருந்த சுக்கிரன், வைகாசி 10 ஆம் திகதி மேஷ இராசிக்கு செல்கிறார். இக்காலத்தில் பாக்கிய ஸ்தானம் வலுப் பெறுவதால், பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். குடும்பப் பிரச்சினை படிப்படியாக மாறும். இடம், பூமி விற்பனையால் இலாபம் உண்டு. இல்லம் தேடி நல்ல தகவல் வரும்.

**மகரச் சனியின் வக்கிர காலம்**

உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். சப்தமாதிபதி வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உத்தியோகத்தில் சக ஊழியர்களோடு பிரச்சினை தலைதூக்கும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்குவீர்கள். வெளிநாட்டு பயணம் தாமதப்படும். ஆதரவு தருவதாகச் சொன்னவர்கள், கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். 6 இற்கு அதிபதியாகவும் சனி இருப்பதால், உடல்நலம் சீராகும். இம்மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் மகாலட்சுமியை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரயங்கள் அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. ஒரு சிலர் ஒவ்வாமை நோய்க்கு ஆட்பட நேரிடும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்க, பெரும் முயற்சி எடுக்கும் சூழ்நிலை ஏற்படும். வருமானப் பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். கடன்சுமை கூடிக் கொண்டே செல்லும். பணிபுரியும் பெண்களுக்கு உயர் பதவி கிடைப்பது தாமதமாகும். எதிலும் யோசித்து செயற்படுவது நல்லது.



உற்றார், உறவினர்களின் உள்ளம் அறிந்து உதவும் கன்னி இராசி வாசகர்களே!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் அஷ்டமத்தில் வக்கிரம் பெறுகிறார். மேலும் குருவினுடைய பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. தன, பாக்கியாதிபதி சுக்கிரன், சப்தம ஸ்தானத்தில் இருப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்.

## பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்!

**மீன - செவ்வாய் சஞ்சாரம்**

வைகாசி 3 ஆம் திகதி, மீன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அபதிபதியான செவ்வாய், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது சகோதரர்களால் சங்கடம் வரலாம். தொழிலில் இழப்புகளை சந்திக்க நேரிடும். பிறரை நம்பி செய்த காரியம் மன வாட்டம் தரும்.

**சனி - செவ்வாய் பார்வைக் காலம்**

வைகாசி மாதம் 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கிறார். உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானம் பலமிழக்கிறது. எனவே வாழ்க்கைத் துணை வழியே சில பிரச்சினை ஏற்படலாம். வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு சில தடுமாற்றங்களும், தடைகளும் ஏற்படும். பிள்ளைகளை நெறிப்படுத்துவதன் மூலமே நிம்மதி பெறமுடியும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் தடை வரலாம். வீண் விரயங்கள் ஏற்படும் நேரம் இது.

**புதன் வக்கிர நிவர்த்தியும், ரிஷப சஞ்சாரமும்**

வைகாசி 7 ஆம் திகதி, மேஷ இராசியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். அது உங்களுக்கு யோகம் தான். உடல்நலம் சீராகும். நினைத்ததை நினைத்தபடி செய்வீர்கள். வைகாசி 23 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது, எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு, பிரபல நிறுவனத்தில் இருந்து அழைப்பு




வரலாம்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

இதுவரை மீனத்தில் உச்சம் பெற்று சஞ்சரித்து வந்த சுக்கிரன், வைகாசி 10 ஆம் திகதி மேஷ இராசிக்கு செல்கிறார். அவர் தன் சொந்த வீட்டைப் பார்ப்பதால் தன ஸ்தானம் வலுவடைகிறது. பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். பெண் வழிப் பிரச்சினை அகலும். புதிய தொழிலுக்கு வங்கிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம், ஊதிய உயர்வு உண்டு. படிப்பிற்கேற்ற நல்ல வேலை அமையும்.

**மகரச் சனியின் வக்கிர காலம்**

உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான், வைகாசி 11 ஆம் திகதி மகரத்தில் வக்கிரம் பெறுகிறார். இந்த நேரம் பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுவிழப்பதால் எதிலும் கவனம் தேவை. சொத்துக்களாலும், சொந்தங்களாலும் சில பிரச்சினை ஏற்படலாம். விரயங்களை, சுப விரயமாக மாற்றுங்கள். உத்தியோகத்தில் சில சர்ச்சைகள் உருவாகும். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. இம்மாதம் சுவாதி நட்சத்திரம் அன்று நரசிம்மரை வணங்குங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதத் தொடக்கத்தில் குருவின் பார்வை இருப்பதால் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. சுபச்செலவுகள் அதிகரிக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு புதிய வேலைக்கு செய்த முயற்சியில் அழைப்புகள் வரலாம். தாய்வழி ஆதரவு உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா


## உழவுக்கு வந்தனை செய்

(நேற்றைய தொடர்ச்சி)

அது கேட்டு கண்ணன் பயந்து போய் அந்த ஊரை விட்டு அடுத்த ஊரிலுள்ள தன் உறவினர் வீட்டுக்குப் போய் விட்டான். இதற்குள் நான்கு நாட்கள் கழிந்தும் விட்டன.

பரமசிவத்தின் குருவும் திரும்பி வந்து "எங்கே புத்தகம்?" என்று கேட்டார். பரமசிவமும் "ஐயா என்ன முயன்றும் அது கிடைக்கவில்லை" என்று கூறினான்.

குருவும் "அன்றே நான் சொன்னேன் புத்தகமோ, பணமோ, பெண்ணோ ஒருவன் கையை விட்டுப் போய் விட்டால் போனது போனது தான்" என்றேன். அதைக் கூட நீ மறந்து போய் விட்டாய் போலிருக்கிறது" என்றார். அப்போது பரமசிவம் "குருவே!



நீங்கள் எப்போதும் நான் தான் மறந்து விட்டேன் என்றே கூறுகிறீர்கள். அப்புத்தகத்தில் கூறிய முறைகளைக் கையாண்டு சாம, தான, பேத, தண்டம் என்ற நான்கு வகைகளிலும் முயன்றேனே" என்று தான் செய்த முயற்சிகளை எல்லாம் கூறினான். குருவும் "அவற்றால் ஏதாவது பயன் ஏற்பட்டதா? இப்படித்தான் நீ வேறு எந்த தொழில் செய்தாலும் இருக்கும்" என்றார். அப்போது பரமசிவம்



"அப்படியானால் தவறு என் மீது இல்லை. அப்புத்தகத்தில் கூறப்பட்ட முறைகள்தான் தவறானவை" என்று உறுமினான். அது கேட்டு குரு சிரித்து "இந்த நான்கு நாட்களாக நான் வேறு ஊரில் இருந்தேன். அவ்வூரார் என் முறைகளால் பயனடைந்து எனக்குப் பண முடிப்பு அளித்து கௌரவித்தார்கள். நீ ஞாபக மறதி கொண்டு கையாலாகாதவனாக இருக்கிறாய் என்பது நன்கு தெரிகிறதே" என்றார்.

பரமசிவம் "அது எப்படி?" எனவே அவரும் "எந்தப் புத்தகத்தால் நீ பயனடையவில்லையோ அந்தப் புத்தகத்தால் அவ்வூரில் உள்ள உன் நண்பன் கந்தன் என்பவன் பயனடைந்தான். நீ கந்தனிடம் புத்தகத்தைக் கொடுத்ததை மறந்து விட்டுக் கண்ணனிடம் போய் அதைக் கேட்டால் எப்படிக் கிடைக்கும்?" என்று சற்றுக் கடுமையாகக் கேட்டார்.

அது கேட்டு பரமசிவம் வெட்கத்தால் தலை குனிந்து கொண்டான். அவன் குருவிடமும் கண்ணனிடமும் மன்னிப்புக் கேட்டும் கொண்டு முன்போல விவசாயமே செய்து வரலானான்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




"விசுவாமித்திரரோடு மிதிலையை அடைந்த போது, கன்னி மாடத்தில் அன்னம் ஆடும் முற்றத்தில் அருகில் அவளைக் கண்டதையும், 'வில்லை முறித்தவன் முனிவரோடு வந்த வீரனாக இல்லை என்றால் உயிரை விடுவேனே' என்று அவள் தன்னைப் பார்த்த செய்தியையும், காட்டுக்குப் புறப்பட்டபோது 'பிரிவினும் சுடுமோ பெருங்காடு' என்று அவள் கேட்டதையும், "யான் அலாதன எல்லாம் உனக்கு இனியவோ" என்று கேட்டதையும், அயோத்தியை விட்டு நீங்குதற்கு முன், "காடு வந்து விட்டதோ" என்று அவள் கேட்டதையும், மற்றைய செய்திகளையும் சொல்லி அனுப்பினான். சாம்பவான், அனுமன் முதலிய படைத் தலைவர்களோடு, பெரும்படையோடும் அங்கதன் தென்திசை நோக்கிச் சென்றான்.

### பிலம் புகுந்து வெளிவந்த கதை

விந்தன் என்பவன் ஏனைய திசைகளை நோக்கிச் செல்லும் படைகளுக்குத் தலைமை தாங்கினான். வளமான தமிழ் பேசும் தென் திசை சென்றவர், முதன் முதலில் விந்தியமலையை அடைந்தனர்; நருமதை ஆற்றையும், ஏமகூட மலையையும், கடந்து, ஒரு பாலைவனத்தைக் கண்டனர்; அப்பாலையின் வெப்பத்திலிருந்து தப்பித்துக் கொள்ள ஒரு பிலத்தின் உள்ளே சென்றனர்; "பாலையில் நடந்தால் மடிவது உறுதி; அதனால், பிலத்து வழியே அது காட்டும் புதிய பாதையில் செல்லலாம்" என்று முடிவு செய்தனர்.

இருட்டு வழியில் அவர்கள் குருட்டு மனிதர் ஆகிவிட்டனர். அனுமன் பேருருக் கொண்டான்; அவன் வாலைப் பிடித்துக் கொண்டு மற்றவர் பின் தொடர்ந்தனர். அனுமன் கையால் தடவிக்கொண்டு விரைந்து நடந்து சென்றான். அந்தப் பிலத்துள் அழகிய நகர் ஒன்றினைக் கண்டனர். அது ஒளி பெற்றுத் திகழ்ந்தது; கவர்ச்சி மிக்கதாய் இருந்தது; அங்கு உண்ண உணவும் தின்னப் பல வகைக் கனிகளும் இருந்தன; குயிலும் மயிலும் ஏனைய வண்ணப் பறவைகளும் இருந்தன; பெண்கள் அழகாய்த் தோற்றமளித்தனர். ஆனால் அவற்றிற்கு உயிர் ஓட்டம் என்பதே காணப்படவில்லை; அனைத்தும் ஓவிய வடிவங்களாய் இருந்தன.

அது மயன் என்னும் அசுரத் தச்சனால் நிர்மாணிக்கப்பட்ட இடம்; அதிலிருந்து தப்பி வெளியேற முடியாமல் திகைத்தனர்; அனுமன் அவர்களுக்கு ஆறுதல் கூறி எப்படியும் வெளியேற்றுவதாக உறுதி தந்தான்.

அப்பொழுது உயிர் ஓட்டம் உடைய அழகிய நங்கை ஒருத்தி, அழகிய சடையுடன் ஒளி பெற்ற உருவத்தோடு காணப்பட்டாள்; அவள் ஒரு மாபெரும் தவசியாய்த் திகழ்ந்தாள்; அவள் பெயர் சுயம்பிரபை என்று அறிந்தனர். அவள், விசித்திரமான கதை ஒன்றைச் சொன்னாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நீங்கள் வாழ்வதோடு பிறர் வாழவும் வழி வகை செய்யுங்கள்.
> *– சர் ரோஸர்லெஸ்ட் ரேஞ்ச்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்களச் சகோதரர்களால் நெஞ்சம் நெகிழ்ந்தோம்

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தமிழ் மக்கள் வாழும் இடமெல்லாம் நினைவு கூரப்பட்டது.

அதிலும் இம்முறை காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம் பெற்றமை ஒரு பெரும் திருப்பம் எனலாம்.

காலிமுகத்திடலில் நடந்த முள்ளிவாய்க் கால் நினைவேந்தலில் சிங்களச் சகோதரர் கள் பங்குபற்றியமை கண்டு நெஞ்சம் நெகிழ்ந்து போனது.

அதிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி அதனை சிங்களச் சகோதரர்களும் பருகினர்.

அதிலும் ஒருபடி மேலாக, இளம் பௌத்த துறவி ஒருவர் முள்ளிவாய்க்கால் கஞ்சியை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்ததைப் பார்த்தபோது, கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொண்டன.

ஆம், முள்ளிவாய்க்கால் மண்ணில் நினை வேந்தலைச் செய்வதற்கே தடை விதித்த ராஜபக்ஷக்களின் கொடூரச் செயலை எம் சிங்களச் சகோதரர்கள் வெறுக்கவும் நிரா கரிக்கவும் தயாராகி விட்டனர் என்பதன் அடையாளமே காலிமுகத்திடலில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலாகும்.

அன்புக்குரிய சிங்களச் சகோதரர்களே! முள்ளிவாய்க்காலில் நடந்த கொடூரத்தை நீங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள்.

மிருகத்தனமான ஆட்சியாளர்களிடம் இந்த நாடு அகப்பட்டுவிட்டதென்பதற்கு அடை யாளம் முள்ளிவாய்க்காலில் நடந்த தமிழின அழிப்பாகும்.

எனினும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இக்கொடுஞ் செயல், பேரினவாத ஆட்சியாளர் களாலும் பேரினவாத ஊடகங்களாலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டன.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இலட்சக்கணக் கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட போதிலும் அவர்களை விடுதலைப் புலிகள் எனப் பிரசாரம் செய்து உண்மை மறைக்கப் பட்டது.

ஆனாலும் இன்று அந்த உண்மை வெளிச் சத்துக்கு வந்துள்ளது.

எமதருமைச் சிங்களச் சகோதரர்களே! வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்களுக்கு நடந்த பேரவலத்தை சமூகவலைத்தளங்கள் வாயிலாக நீங்கள் பார்க்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக சனல் 4 தொலைக் காட்சியின் ஆவணப்படத்தை நீங்கள் பார்ப்பீர் களாயின், தமிழ் மக்களுக்கு ராஜபக்ஷக் கள் செய்த கொடூரம் எத்தன்மையதென் பதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

தவிர, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு எதிராக நீங்கள் மேற்கொண்டுவரும் போராட்டம்; மகிந்த ராஜபக்ஷவின் பிரதமர் பதவிக்கு முடிவு கட்டியது. இது உங்களின் முதல் வெற்றி.

உங்கள் அகிம்சை வழிப் போராட்டத்துக் குள்; தமிழ் மக்கள் தொடர்பில் நீங்கள் கொண் டிருந்த புரிதலை எங்களால் உணரமுடிகிறது.

இனவாதத்தால் இலங்கைத் திருநாடு அழிந்தது என்ற மெய்மையை சிங்கள மக் களாகிய நீங்கள் ஏற்றுள்ளீர்கள் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது.

எனவே சிங்கள மக்களே! நீங்கள் நினைத் தால் – நீங்கள் மனம் வைத்தால், பேரின வாதத்தை முதலீடாக வைத்து அரசியல் வியாபாரம் நடத்தும் துரோகிகளை இந்த நாட்டிலிருந்து துரத்த முடியும்.

அதைச் செய்தால், அழகிய இலங்காபுரி தானாகத் தலைநிமிரும்.

# தேரர்கள் மதத்தை அரசியலில் கலக்கவிட்டு நாட்டை அழிவில் தள்ளி உள்ளனர்

## பாராளுமன்றில் மனோ கணேசன்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமைகளுக்கு தேரர்களே பொறுப்பு கூற வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒன்பதாம் திகதி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் மாறி, மாறி குற்றச்சாட்டுக்களை சுமத்துவதில் எந்த பயனும் இல்லை. இந்த அனைத்து பிரச்சினைகளுக்கும் பிரதான காரணம் தேரர்கள்.

தேரர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது. இந்துக் குருக்கள் ஆலயங்களில் இருப்பதை போன்று இஸ்லாமிய இமாம்கள் பள்ளிவாசல்களில் இருப்பதை போன்று, கத்தோலிக்க பாதிரியார் தேவாலயங்களில் இருப்பதை போன்று தேரர்கள் விகாரைகளில் இருக்க வேண்டும்.

1959 ஆம் ஆண்டு முதல் அரசியல் கொலையை ஒரு பௌத்த பிக்குவே மேற்கொண்டார்.

அதன்பின் பௌத்த மதத்தை அரசியலில் கலக்க விட்டு, இந்த நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றுள்ளார்கள்.

இத்தனை பிரச்சினைக்கும் தேரர்களே காரணம் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (ம-7)

# சர்வதேச நீதிமன்றம் முன் போர்க் குற்றவாளிகளை நிறுத்துக

## பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

இலங்கையில் நடந்த குற்றங்களைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்புமாறு பிரித்தானிய எதிர்க்கட்சி தலைவரும் முன்னாள் தலைமை வழக்கறிஞருமான கெய்ர் ஸ்டர்மேர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் இலங்கை போரின் இறுதிக்கட்டத்தின்போது கொல்லப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழர்களை நாம் நினைவுகூருகிறோம். தொழிற்கட்சி தமிழ் மக்களுடன் கை கோர்த்து நிற்கின்றது.

இந்த நாளை நாம் நிதானித்துச் சிந்திக்கும் போது, எங்கள் எண்ணங்கள் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அன்புக்குரியவர்களுடன் உள்ளன. ஆனால் நாம் இழந்தவர்களை நினைவு கூரும் போது இது உண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தின் அவசியத்தை நினைவூட்டுவதாகவும் இருக்க வேண்டும்.

13 ஆண்டுகளாகியும் இந்தக் கொடுமைகளைச் செய்த குற்றவாளிகள் இன்னும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவில்லை. இன்று, இத்தகைய பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு ஆளானவர்களுக்கும் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் குடும்பங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்று தொழில் கட்சி மீண்டும் உறுதியளிக்கின்றது.

ஐக்கிய இராச்சிய அரசாங்கம்(Uk) தமிழர்களுடன் நிற்க வேண்டும் என்றும், அட்டூழியங்களில் ஈடுபட்டவர்களைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) ஐ.நா உயர்ஸ்தானிகரின் பரிந்துரைகளுக்கு அமைய அனுப்ப வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ் பிரதிகள் வழங்கும் பணிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

தரவு கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக, நாடளாவிய ரீதியில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ் பிரதிகளை வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளன.


கோளாறின் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மறுசீரமைப்புக்குப் பிறகு மீண்டும் சேவைகளை முன்னெடுப்பது தொடர்பான அறிவிப்பு பொதுமக்களுக்கு வெளியிடப்படும் என்று அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் மொரட்டுவ நகரசபை தலைவர் உட்பட பலர் கைது

காலிமுகத்திடல் அருகில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் மொரட்டுவ நகரசபை தலைவர் சமன் லால் பெர்னாண்டோ, சீதாவகபுர பிரதேச சபையின் தலைவர் ஜயந்த ரோஹன, களனி பிரதேச சபை உறுப்பினர்களான மஞ்சுள பிரசன்ன மற்றும் டான் பிரியசாத் ஆகியோரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். (ம-7)

# சத்திய தரிசனம்



## சத்தியம்

- மேலும் நான் நமது சுவாமியின் உருவத்தை தொடர்ந்து சிந்தனையில் வைத்திருப்பதால் அவரை தியானிப்பதன் மூலமும் அவரை இடையுறாது வணங்குவதன் மூலமும் எனக்கு எவ்வித ஆசையும் இல்லை என்பதைக் குறிப்பிடுகிறேன்.
- நமது சுவாமி உருவத்தின் அத்தகைய மகிமை அல்லவா? அவர் ஆனந்தக் கடல் அல்லவா? இந்த இடத்தில் பகவான் சீரடி சாயியின் வாக்கு ஒன்றை இங்கு நினைவுபடுத்துகிறேன். “ என்னை நினைவில் வைத்திருப்பவர்கள் எங்ஙனம் உலகப் பொருட்கள், உணர்ச்சிகள் இவைகளின் கவனமுள்ளவர்களாக இருக்க முடியும்” என்று கூறியுள்ளார். இது உண்மையான எனது அனுபவத்தின் ஊடாக உணர்கின்றேன். நமது சுவாமியை தியானிப்பதன் ஊடாக எனக்கு அகங்காரம், கோபம், பொறாமை மாயமாய் சென்றுவிட்டன.
- சுவாமி தனது அருளமுதத்தில் குறிப்பிட்டுள்ளார். தெய்வத்தை தியானிக்கும் போது பொறாமை, பேராசை அனைத்தும் அழிந்துவிடும். அனைத்தும் அழிந்துவிடும். என்ற வார்த்தை உனது அனுபவத்தினூடாக உணர்கிறேன். இது தெய்வ வாக்கு அல்லவா? நான் எனது வாழ்க்கையில் உண்மை பேசுகிறேன். மற்றவர்களுடன் உரையாடும் போது சத்தியத்தை வலியுறுத்துகிறேன். சத்தியம் சத்தியத்திற்கு அடி பணியுமே தவிர வேறு பொய்மைக்கு அடிபணிய மாட்டாது. இதனால் தான் சுவாமி எனக்கு சத்தியம் என்று பெயரை சூட்டியுள்ளார் என்று நினைக்கிறேன். மேலும் நான் நமது சுவாமியை நல்ல தாயாக, தந்தையாக, குருவாக, தெய்வமாக இதற்கு மேலான எனது நண்பனாகவும் சுவாமியை பயன்படுத்துகின்றேன். அனுபவிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 68

அட்டவணை(R4) மொணராகலை
மாவட்டதேர்தல்தொகுதிகளும்சனத்தொகையும்

| தேர்தல்தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பிபிலை | 59208 | 998 | 3149 | 15 | 63370 |
| மடுள்ள | 59463 | 236 | 2797 | 24 | 62520 |
| மொணராகலை மேற்கு | 56050 | 10110 | 2077 | 103 | 68340 |
| மொணராகலை கிழக்கு | 61621 | 54 | 26 | 9 | 61710 |
| புத்தளை | 61105 | 1170 | 439 | 44 | 62758 |
| தணமல்வில | 66582 | 52 | 3 | 18 | 318698 |
| வெல்லவாய | 64075 | 587 | 1017 | 26 | 65705 |
| மொத்தம் | 428104 | 13207 | 9508 | 239 | 451058 |

சுருக்கமாகக் கூறினால் 5 பிரதேச செயலகங்கள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 5 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 1 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும் தொகுதிக்கான சராசரி மக்கள் தொகைக்கு -4.2% மற்றும் + 6.1% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக்கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து மொனராகலை மாவட்டம் 7 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

அத் தேர்தல் தொகுதிகளாவன; பிபிலை (64), மடுள்ள (68), மொனராகலை கிழக்கு (50), மொனராகலை மேற்கு (49), வெல்லவாய (32), புத்தளை (29), தணமல்வில (27) ஆகும்.

அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (R4) இல் தரப்பட்டுள்ளது.




மொணறாகலை மாவட்டம்
பிரதேச செயலகங்கள்

**சப்ரகமுவ மாகாணம் பற்றிய தகவல்கள்**

இரத்தினபுரி மாவட்டத்துக்கான 3275 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கேகாலை மாவட்டத்திற்குரிய 1,693 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டு அமைந்துள்ள சப்ரகமுவ மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பு 4,968 சதுர கிலோ மீற்றர்களாகும்.

நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 7.6% ஐக் கொண்டுள்ள இந்த மாகாணம் வடக்குத் திசையில் வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களையும் தெற்குத் திசையில் தென் மாகாணத்தையும் கிழக்கு திசையால் மத்திய மற்றும் ஊவா மாகாணத்தையும் மேற்குத் திசையால் மேல் மாகாணத்தையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது.

மாகாண நிலப் பரப்பில் 4921 சதுர கிலோ மீற்றர் நிலத்தாலும் 47 சதுர கிலோ மீற்றர் நீர்ப் பரப்பையும் கொண்டுள்ளது. நீர்ப்பரப்பானது மாகாணத்தின் மொத்தப் பரப்பின் 0.9% ஆகும். மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பில் 906 சதுர கிலோ மீற்றர் அதாவது 18.2% 2010 ஆம் ஆண்டு புள்ளி விபரங்களுக்கு அமைய வனப் பிரதேசமாக இருந்துள்ளது. மாகாணத்தின் தலைநகரம் இரத்தினபுரியாகும்.

நாட்டின் தெற்கு தாழ் நிலங்கள் மற்றும் மலைநாட்டை இணைக்கும் பிரதான வீதிகள் இந்த மாகாணத்தில் அமைந்துள்ளன. 2016 ஆம் ஆண்டளவில் 4,011 கிலோ மீற்றர் நீளமான வீதிக் கட்டமைப்பு மாகாணத்தில் காணப்பட்டது.

**இரத்தினபுரி மாவட்டத்துக்கான 3275 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கேகாலை மாவட்டத்திற்குரிய 1,693 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டு அமைந்துள்ள சப்ரகமுவ மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பு 4,968 சதுர கிலோ மீற்றர்களாகும்.**

**நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 7.6% ஐக் கொண்டுள்ள இந்த மாகாணம் வடக்குத் திசையில் வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களையும் தெற்குத் திசையில் தென் மாகாணத்தையும் கிழக்கு திசையால்**

**மத்திய மற்றும் ஊவா மாகாணத்தையும் மேற்குத் திசையால் மேல் மாகாணத்தையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது. மாகாண நிலப் பரப்பில் 4921 சதுர கிலோ மீற்றர் நிலத்தாலும் 47 சதுர கிலோ மீற்றர் நீர்ப்பரப்பையும் கொண்டுள்ளது.**

சப்ரகமுவ மாகாணம் 2015 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த பொருளாதார அபிவிருத்தியில் 7% பங்களிப்பைச் செலுத்தியது. அத்தோடு சேவைத் துறையில் 7%, கைத்தொழிற்றுறையில் 6%, விவசாயத் துறையில் 8% பங்களிப்புச் செலுத்தியுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தின் பொருளாதார வருமானம் முக்கியமாக சேவைத் துறையில் இருந்தும் (64%) அதைத்தொடர்ந்து கைத்தொழிற்றுறையில் இருந்தும் (26%) மிகுதி விவசாயத் துறையில் இருந்தும் (10%) கிடைக்கப் பெறுகின்றன.

2016 ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாணத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (38%), அதைத்தொடர்ந்து விவசாயத் துறையில் (31 %) மற்றும் கைத்தொழிற்றுறையில் (31 %) ஆகும்.

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) பிரகாரம் சனத்தொகையின் விஞ்ஞான ரீதியான பிரிவுகளான நிர்வாகம், உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்கள் தொடர்பாக மாகாணத்திற்கும் அதன் மாவட்டங்களுக்கும் ஏற்புடைய தகவல்கள் அடுத்துவரும் பகுதிகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

### சப்ரகமுவ மாகாணம் சனத்தொகை, சனத்தொகை அடர்த்தி மற்றும் எழுத்தறிவு-2012

சனத்தொகை மற்றும் குடியிருப்பு கணக்கெடுப்பின்படி (2012) இலங்கை சனத்தொகையில் 9.5% (அல்லது 1,928,655 பேர்) சப்ரகமுவ மாகாணத்தில் வசிக்கின்றனர். மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 56.4% அதாவது 1,088,007 பேர் இரத்தினபுரி மாவட்டத்திலும் 43.6% அதாவது 840,648 பேர் கேகாலை மாவட்டத்திலும் வசிக்கின்றனர். மாகாணத்தின் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 392 பேராகும். 10 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையினரின் எழுத்தறிவு 2012 ஆம் ஆண்டில் 94.8% ஆகும்.

### சப்ரகமுவ மாகாணம் பால்நிலை அடிப்படையில் சனத்தொகை பரம்பல் -2012

நாட்டின், மாகாணங்களின் மற்றும் மாவட்டங்களின் அடிப்படையில் பால்நிலைக்கு ஏற்ப சனத்தொகைப் பரம்பல் அட்டவணை 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இரு மாவட்டங்களினதும் பால்நிலைக்கு ஏற்ப சனத்தொகைப் பரம்பல் இலங்கையின் சனத்தொகைப் பரம்பலைப் போன்று ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராயில்...

துரைராசா மயூரன் (வயது- 27) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகே இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

மேற்படி விபத்துச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ம-7,18,33,104)

## கோ.சி.வேலாயு...

ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளரும் வலம்புரிப் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான கோ.சி.வேலாயுதம் அவர்கள் நேற்று லண்டனில் காலமானார். அவருக்கு வயது 87.

ஆசிரியர், அதிபர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எனப் பல்பரிமாண ஆளுமை கொண்ட கோ.சி.வேலாயுதம் மிகச்சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கியவர்.

வலம்புரிப் பத்திரிகையின் ஆரம்பகால ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

இறுதிக் காலத்தில் லண்டனில் வசித்து வந்த அவர், உடல்நலக்குறைவு காரணமாக காலமானார்.

அவரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் இடம்பெறும். (ந)

## திருநெல்வேலி...

சந்தி பூங்கனிச்சோலையருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் கோப்பாய் பூதர் மடத்தடியைச் சேர்ந்த மகேந்திரன் மகிந்தன் (வயது- 25), கச்சேரி கிழக்கைச் சேர்ந்த றொபின்சன் சார்ள்ஸ் (வயது- 23) மற்றும் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த யோகநாதன் மேர்வின் டேனுஜன் (வயது-17) ஆகிய மூவரே உயிரிழந்துள்ளனர்

ஒரு மோட்டார் சைக்கிளில் மூவரும் மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் இருவரும் பயணித்த நிலையில் இரு மோட்டார்ச் சைக்கிள்களும் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிர் எதிரே மோதியமையால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தின்போது மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் தீப்பற்றி எரிந்துள்ளன. குறித்த விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் அயலவர்கள் கூடித் தீயினை அணைத்துப் படுகாயமடைந்த மூவரையும் நோயாளர் காவு வண்டியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

எனினும், மேலும் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த நிலையில் ஏனைய இருவரும் தொடர்ந்தும் ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,18,33,104)

## முன்னாள் ஜனாதி...

றன.

இந்த நிலையில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து தமது இல்லத்தில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இது குறித்து அவர் தனது முகநூல் தளத்தில் இட்டுள்ள பதிவில், நாங்கள் சிங்களவர், தமிழ், முஸ்லிம் என பிரிந்துள்ளோம். அந்தப் போரினால் நான் ஒரு கண்ணை இழந்தேன். இன்னும் பல இழப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது.

போரின் முடிவைக் கொண்டாடும் இந்த நேரத்தில் வெறுப்புக்குப் பதிலாக அன்பைக் காட்டுவோம். பழிவாங்குவதற்கு பதிலாக மன்னிப்போம் என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கொழும்பில்...

ஊர்வலம் இடம்பெற்றது.

அத்துடன், ஊர்வலத்தில் ஈடுபட்டோர் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஒன்றுகூடி நினைவேந்தல் உரைகளை ஆற்றினர்.

இறுதி யுத்ததின்போது உயிர்நீத்த தமிழ் உறவுகளுக்காக, சிங்கள, தமிழ், முஸ்லிம் என மூவினங்களைச் சேர்ந்த மக்களும்கொழும்பு காலிமுகத்திடல்கோட்டா கோ கம ஆர்ப்பாட்டத் தளத்துக்கு முன்பாக ஒன்றுகூடி நேற்றுக் காலை நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டது.

அத்துடன், அங்கு அமைக்கப்பட்ட நினைவுச் சின்னத்துக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன், காலிமுகத்திடல் கடற்கரையில் மலர் தூவப்பட்டதுடன், முள்ளிவாய்க்கால் கஞ்சியும் ஆர்ப்பாட்ட இடத்திலுள்ளோருக்கு பகிரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பாராளுமன்றத்...

டம் அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரன் ஆகியோரும் அஞ்சலியில் கலந்து கொண்டிருந்தனர்.

எனினும், தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களுக்கு ஆதரவாக அஞ்சலி செலுத்தப்பட்டதாகக் கூறி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக்க மயாதுன்ன எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தார். எனவே அதனை ஹன்சார்ட்டில் இருந்து நீக்குமாறு அவர் கோரினார்.

இந்தநிலையில், சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினர் பிரேம்நாத்.சி தொலவத்த, இது தொடர்பில் சபாநாயகருக்கு அறிவிப்பதாக கூறியதுடன், அதற்குரிய உத்தரவை அவர் பிறப்பிப்பார் எனக் குறிப்பிட்டார்.

அதன்பின்னர் தமது உரையினை தொடர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், இறுதி யுத்தத்தின்போது உயிரிழந்த மக்களுக்காகவே தாம் அஞ்சலி செலுத்தியதாக தெரிவித்தார். (ம-7)

## கண்ணீரில்...

இறுதி யுத்தத்தில் உயிர்நீத்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி வடக்கு, கிழக்கின் பல்வேறு பகுதிகளில் நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இறுதி யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு 13ஆவது வருடமாகவும் இம்முறை முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் சமயத் தலைவர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்து பேரணியாக வருகை தந்தவர்களும் இந்த அஞ்சலியில் பங்கேற்றிருந்தனர்.

இறுதி யுத்தத்தில் உயிர்நீத்தவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க நினைவேந்தலில் பங்கேற்றனர். யுத்தத்தில்கையை இழந்த ஒருவரால் இதன்போது ஈகச் சுடர் ஏற்றப்பட்டது.

இதன்போது, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், முள்ளிவாய்க்கால் பிரகடனத்தை தவத்திரு அகத்தியர் அடிகளார் வெளியிட்டார்.

இதேவேளை, வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் பொத்துவில் மற்றும் வல்வெட்டித்துறையிலிருந்து முன்னெடுக்கப்பட்ட இருவேறு பேரணிகள் நேற்று முள்ளிவாய்க்காலை சென்றடைந்தன.

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு யாழ்.பல்கலைக்கழகத்திலும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு முன்பாக இதன்போது சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல் நிகழ்வு யாழ். குருநகரில் நேற்று நடைபெற்றது. இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது.

யாழ்ப்பாணம் - வலி. கிழக்கு பிரதேச சபையிலும் நேற்று நினைவேந்தல் நிகழ்வொன்று நடைபெற்றது. இதன்போது உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

சிவில் அமைப்புகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தல் நிகழ்வு, வவுனியா நகர சபை மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில், வவுனியா தபால் நிலையத்திற்கு முன்பாகவும் நினைவேந்தல் நிகழ்வொன்று இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய,வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பஜார் பகுதியிலும் யுத்தத்தில் மீளாத்துயில் கொண்ட உறவுகள் நினைவுகூரப்பட்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு கிளிநொச்சியிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் நேற்று மூடப்பட்டிருந்தன. அத்துடன், கிளிநொச்சி - சுண்டிக்குளம் சந்தியிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை நேற்று மோட்டார் சைக்கிள் பேரணியொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு - கல்லடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திற்கு முன்பாகவும் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு - வாகரை, மாணிக்கபுரம் கடற்கரையின் முகத்துவாரத்திலும் நினைவேந்தல் இடம்பெற்றதுடன், முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது.

(ம-7,18,33,104,250,285,299)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 18/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1245
மீனம் 7 8 1 1 3 4

மெகா பவர்
திகதி 18/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1107
Y 20 14 16 22 72

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.05.18
சீட்டிழுப்பு இலக்கம் 068
கடகம் 32 54 55 61 கடகம்

மஹஜன சம்பத
திகதி 2022/05/18
சீட்டிழுப்பு இலக்கம் 4759
L 1 5 6 9 3 4

தன நிதானய
திகதி - 2022.05.18
சீட்டிழுப்பு இலக்கம் - 789
J 15 28 39 68

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1736
சீட்டிழுப்பு திகதி 2022.05.11
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்கிழமை
N 05 36 68 71
ரூ. 2,982,480/-

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.05.11
சீட்டிழுப்பு இல : 3897
ரூ. 3,369,480/-
01 05 30 35 C

ராசி
திகதி 2022-05-11
வெற்றி வாரம் 3448
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,591,603/-
16 26 53 54 கன்னி
பச்சை
ரூ. 8,607,340/-

C 14 07 49 56 64
சீட்டிழுப்பு வாரம் 912
பச்சை
2022.05.11 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 236,854,705/-


அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1562
சீட்டிழுப்பு திகதி : 2022.05.11
ரூ. 3,701,180/-
39 43 52 66 F


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்று வழிப்பாதையுடன்
  01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
  02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
  03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
- சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.




(11417)

தொடர்பு

**077 623 4204, 077 288 0152, 076 658 3621**

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 – 08 – 1962

மறைவு 18 – 05 – 2022

## மினாசி இன்பராசா

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு V.C. Lane ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மினாசி இன்பராசா அவர்கள் நேற்று (18.05.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மினாசி - மீனாட்சி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரோஜா அவர்களின் அன்புக் கணவரும் காருண்யாவின் பாசமிகு தந்தையும் இரத்தினபாக்கியம், காலஞ்சென்ற நவரத்தினம், இராசதுரை (இந்தியா), இராசலட்சுமி, இராசமலர் (ஜேர்மனி), லீலாவதி (இந்தியா), வவா (பிரான்ஸ்), செல்வராசா (ஜேர்மனி), பவிதா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் வரதகுலசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), தவமலர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), தர்மகுலசிங்கம் (சுவிஸ்), நல்லமலர் (கனடா), பஞ்சலிங்கம், குணசிங்கம் (கனடா), ரவீந்திரன் (ஆசிரியர்), பிரியமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.05.2022) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(11436)

V.C லேன்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

077 711 0440 குடும்பத்தினர்

## ஆசிரியர் தேவை

புதிய கல்வி நிலையம் ஒன்றுக்காக தரம் 6-11 வரை தமிழ், விஞ்ஞானம், கணிதம் உட்பட சகல பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவைப்படுகின்றனர்.

(11367)

நெல்லியடி - 077 834 3666
விசுவமடு - 076 004 4882

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

(C-4313)

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய்
- சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி
- கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.

0777-068-777

## சார்தாம் யாத்திரை
## பத்திரி, கேதார் யாத்திரை

நாட்கள் : 12 ஆரம்பம் : 20.06.2022

செல்லுமிடங்கள் :
பத்திரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, ஹரித்துவர், ரிஷிகேஸ், சென்னை

விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க

(11433)

S.ராஜன் கைபேசி : 077 736 2154

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 22 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( நவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையிலும் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் ( பார்மசி )
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

(11435)

A9 வீதியுடன் 7 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் என்று நேற்று தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

077 814 7389, 077 241 7589 - ஜெயம்

## வவுனியாவில் குளத்தில் விழுந்த முதியவர் பலி

(வவுனியா)

வவுனியா வைரவபுளியங்குளம் குளத்தில் மூழ்கி முதியவர் ஒருவர் பரிதாபமாக மரணமடைந்துள்ளார்.

நேற்று மாலை குறித்த முதியவர் வைரவபுளியங்குளப்பகுதியில் ஒய்வெடுத்துள்ளார்.

இதன்போது தவறுதலாக குளத்தினுள் வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த அ.தங்கவேல் என்ற முதியவரே மரணமடைந்துள்ளார்.

(ம-7,299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.